RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 66 | மார்ச்.15 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை: மார்ச்.15-

'உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவுக்கு (LPG) பதிலாக மின் அடுப்புகளை பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்வுக்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்' என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: 'வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு (LPG) தட்டுப்பாட்டு இடர்பாடுகளை நீக்கி தொழில் துறை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் தொழில் சீராக நடைபெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது போர் தொடுத்தன. இதனைத் தொடர்ந்து ஈரான் அரசால் ஹொர்முஸ் (Hormuz) ஜலசந்தியின் வழியாக செல்லும் கப்பல்கள் தடை செய்யப்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவிற்கு வளைகுடா பகுதியிலிருந்து வரும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தடைப்பட்டது. தமிழ்நாட்டில் எரிவாயு (LPG) தட்டுப்பாடு தொடர்பாக மார்ச் 10 ஆம் தேதி முதல்வர் தொடர்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பிரச்சினை தொடர்பாக, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மார்ச் 11 ஆம் தேதி தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த இடர்பாடு தொடர்பாக தலைமைச் செயலாளர் மார்ச் 9, 12,13 ஆகிய நாட்களில் தொடர்புடைய துறைகளின் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட்டது.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியன பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற கோரினர். இது தொடர்பாக இன்று முதல்வர் தலைமையில் சம்பந்தப்பட்ட அரசு துறையின் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவிற்கு (LPG) பதிலாக மின்அடுப்புகளை பயன்படுத்தும் போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்விற்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்.

எரிவாயு (LPG) பயன்படுத்தும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நெருக்கடியை சமாளிக்கும் வகையில் மின் அடுப்புகள் மின் சூடேற்றிகள் உள்ளிட்ட மின் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ், 25 சதவிகிதம் / அதிகபட்சமாக 3.75 லட்சம் ரூபாய் மானியத்துடன் கடன் வழங்கவும், தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் / 2 லட்சம் ரூபாய் மானியத்துடன் 10 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கவும் மற்றும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 35 சதவிகிதம் / அதிகபட்சமாக 1 கோடி ரூபாய் வரை மானியத்துடனும் கடன் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 60,698 தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையினை பெற்று, எல்பிஜி., சிஎன்ஜி, டீசல், பர்னஸ் ஆயில், விறகு போன்றவற்றை எரிப்பொருளாக பயன்படுத்தி இயங்கி வருகின்றது. இந்நிறுவனங்கள் எல்பிஜி., சிஎன்ஜி, போன்ற எரிபொருட்களுக்கு மாற்றாக மண்ணெண்ணை, ஆர்டிஎஃப், எச்எஸ்டி, பயோமாஸ் போன்றவற்றை எரிபொருளாக பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், இதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை (CTE/CTO) பெற தேவையில்லை, தகவல் தெரிவித்தால் மட்டும் போதுமானது எனவும், ஒன்றிய அரசு அறிவித்துள்ள எல்பிஜி., சிஎன்ஜி பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் கால அவகாசம் வரை இந்த விலக்கு அமலில் இருக்கும் எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 9,300 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நாள் ஒன்றுக்கு 55 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து கையாளும் திறன் உள்ளது. இந்த இடர்பாட்டினால் மீதமாகும் தேவைக்கு அதிகமான பாலினை பால் உற்பத்தியாளர்களிடமிருந்து ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களில் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க ஆணை யிடப்பட்டுள்ளது. எரிவாயு (லிறிநி) பற்றாக்குறையால் உணவகங்கள் மூடப்படும் வேளையில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறி விற்பனை பாதிக்கப்படலாம்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு விவசாயிகளை தாங்கள் விளைவித்த காய்கறிகள் மற்றும் பழங்களை இடர்பாடின்றியும், 194 உழவர் சந்தைகளில் எவ்வித கட்டுப்பாடு இல்லாமல் விற்பனை செய்ய அனுமதி வழங்கி ஆணை யிடப்பட்டுள்ளது.

மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டினை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதேபோன்று மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

இத்துடன், இந்த மாதம் பொது விநியோக திட்டத்திற்கு கூடுதலாக 3228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டசபை தேர்தலை முன்னிட்டு காக்களூரில் துணை ராணுவம் கொடி அணிவகுப்பு நடத்தியது

திருவள்ளூர், மார்ச்.15-

தமிழகம் உட்பட 5 மாநிலங்களில் விரைவில் சட்டசபை தேர்தல் தேதி அறிவிக்கப்பட உள்ளது. இதை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும். இந்த நிலையில், தேர்தல் பணிக்கு உத்தரபிரதேசத்தில் இருந்து சிறப்பு ரயில் மூலம் சென்னை பெரம்பூருக்கு உதவி கமாண்டர் காரத்திகேயன் தலைமையில் 90 துணை ராணுவப்படையினர் திருவள்ளூருக்கு வருகை வந்தனர். இவர்கள் கனகவல்லிபுரம் காவல் பயிற்சி பள்ளியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



இந்நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு திருவள்ளூரில் துணை ராணுவப் படையினர் அணிவகுப்பு மேற்கொண்டனர். கடம்பத்துார் ஒன்றியத்தில் பதற்றமான ஓட்டுச்சாவடியாக அறிவிக்கப்பட்ட பாப்பரம்பாக்கம், மணவாளநகரில் நேற்றுமுன்தினம் துணை ராணுவப்படையினர் அணிவகுப்பு நடத்தினர்.

நேற்று காக்களூர் எடை மேடை முதல் காக்களூர் தேர்தல் நடைபெறும் மையம் வரையும் திருப்பாச்சூர் கூட்டுச்சாலை முதல் திருப்பாச்சூர் பெட்ரோல் பங்க் வரையும் மாவட்ட கூடுதல் எஸ்பி கலியன், போலீஸ் டிஎஸ்பி தமிழரசி, போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் திருவள்ளூர் தாலுகா விஜயகுமார், கடம்பத்தூர் பரந்தாமன், மப்பேடு சீத்தாபதி, சப் இன்ஸ்பெக்டர் கோபி கிருஷ்ணன் முன்னிலையில் 20 போலீசாருடன் உதவி கமாண்டர் கார்த்திகேயன் தலைமையில் 90 துணை ராணுவ வீரர்கள் அணிவகுப்பு நடத்தினர்.

## சென்னையில் இருந்து துபாய்க்கு சிறப்பு விமானம்

சென்னை, மார்ச்.15-

மீனம்பாக்கம்: சென்னையில் இருந்து துபாய் சென்றுவரும் ஏர்இந்தியா விமானங்களும் கடந்த மாதம் 28ம்தேதி முதல் கடந்த 14 நாட்களாக ரத்து செய்யப்பட்டுள்ளன. துபாயில் இருந்து அவ்வப்போது எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் நிறுவனம் சென்னைதுபாய் இடையே சிறப்பு விமானங்களை இயக்கி வருகிறது. எனினும் சென்னையில் இருந்து அபுதாபி, குவைத், தோகா, மஸ்கட், ஓமன், சவுதி அரேபியா உள்பட பல்வேறு நாடுகளுக்கு இன்னும் வழக்கமான விமான சேவைகள் துவங்கப்படவில்லை. இதனால் மத்திய கிழக்கு நாடுகள், ஐக்கிய அரபு



நாடுகள், வளைகுடா நாடுகள் உள்பட பல்வேறு நாடுகளில் உள்ள இந்தியர்கள் நாடு திரும்ப முடியாமல், அந்தந்த நாடுகளில் பெரிதும் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை விமானநிலைய பன்னாட்டு முனையத்தில் இருந்து இன்றிரவு 8.30 மணியளவில் துபாய்க்கு ஏர்இந்தியா எக்ஸ்பிரஸ் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஒரு சிறப்பு விமானத்தை இயக்குகிறது. இந்த விமானம் நள்ளிரவு 12.35 மணியளவில் துபாயை சென்றடைகிறது. பின்னர், அங்கிருந்து நாளை (15ம் தேதி) அதிகாலை 2.10 மணியளவில் புறப்பட்டு, காலை 6.15 மணியளவில் சென்னை விமானநிலைய பன்னாட்டு முனையத்துக்கு வந்து சேருகிறது. இந்த சிறப்பு விமானததில் சுமார் 200 பேர் பயணம் செய்கின்றனர்.

''ஏற்கனவே முன்பதிவு செய்து, அந்த விமான சேவை ரத்தானதால் பயணிக்க முடியாமல் தவிக்கும் பயணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்'' என்று ஏர்லைன்ஸ் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "ஆசிரியர்களையே நியமிக்காமல் தேவாவும், ஜீவாவும் எப்படி படிப்பார்கள் முதல்வரே?" : அன்புமணி

சென்னை: மார்ச்.15-

"ஆசிரியர்களையே நியமிக்காமல் தேவாவும், ஜீவாவும் எப்படிப் படிப்பார்கள் முதல்வரே? மாணவர்களின் கல்வி மீது கொண்ட ஆர்வத்தால் நீங்கள் இந்த சந்திப்பை நிகழ்த்தவில்லை" என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அரசு நிர்வாகத்தைக் கவனிப்பதை விட, விளம்பரப் படங்களில் நடிப்பதிலேயே அதிக நேரம் செலவிட்டு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், இன்று புதிதாக ஒரு விளம்பரப் படத்தில் நடித்து வெளியிட்டிருக்கிறார்.

முதல்வர் எத்தனை விளம்பரப் படங்களில் வேண்டுமானாலும் நடித்துக் கொள்ளட்டும். அதற்காக மக்களின் வரிப்பணத்தைக் கூட வீணடித்துக் கொள்ளட்டும். அதையும் கூட பொறுத்துக் கொள்வோம். ஆனால், முதல்வரின் சொல்லுக்கும், செயலுக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்பது தான் நமது வினா.

கடலூர் மாவட்டம் சாத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தேவா, ஜீவா என்ற சிறுவர்கள் அருகில் உள்ள நெல்லித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முறையே 5 மற்றும் 2 ஆம் வகுப்புகளில் படித்து வருகின்றனர். திரையுலக நட்சத்திரங்களுடன் இணைந்து இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வெளியிடும் அளவுக்கு



புகழ்பெற்றிருக்கும் அவர்கள் 'படிப்பை மட்டும் விட்றவே விட்றாதீங்க...' என்று வலியுறுத்தி வெளியிட்ட ரீல்ஸ் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவரது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசி வீடியோ வெளியிட்டதுடன், கலெக்டராகவும், காவல்துறை அதிகாரியாகவும் வரும் அளவுக்கு நன்றாக படிக்க வேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார். இதில் ஒன்றும் தவறு இல்லை.

முதல்வரின் ஷூட்டிங் பாணியில் பேசுவதாக இருந்தால், அடுத்த ஷாட்டுக்கு கடலூர் மாவட்டம் நெல்லித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு செல்வோம். அந்த பள்ளியில் தான் ரீல்ஸ் புகழ் மாணவர்கள் தேவாவும், ஜீவாவும் படிக்கிறார்கள்.

நெல்லித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மொத்தம் 5 வகுப்புகள் உள்ளன. 30 மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். ஆனால், அந்தப் பள்ளியில் ஒரே ஒரு தலைமை ஆசிரியர், ஒரே ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ளனர். இரு ஆசிரியர்களை மட்டும் வைத்துக் கொண்டு 5 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு எப்படி பாடம் நடத்த முடியும்? எப்படி தரமான கல்வி வழங்க முடியும்? தேவாவும், ஜீவாவும் எப்படி கலெக்டராகவும், காவல் அதிகாரியாகவும் ஆவதற்கு ஏற்ற அடிப்படைக் கல்வியை பெற முடியும்? சொல்லுங்க முதல்வரே!

தேவா, ஜீவா பயிலும் பள்ளியின் நிலைமை மட்டும் இவ்வளவு மோசமாக இல்லை. தொடக்கக் கல்வித்துறை சார்பில் 22,831 தொடக்கப் பள்ளிகள் செயல்படுகின்றன. அவற்றில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் 5 வகுப்புகளுக்கு வெறும் 2 ஆசிரியர்கள் மட்டும் தான். மேலும் 3800 தொடக்கப்பள்ளிகளில் 5 வகுப்புகளுக்கும் சேர்த்து ஒரே ஆசிரியர் தான்.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 29,418 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் ஒரு லட்சம் வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் இல்லை. இந்த லட்சணத்தில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரமான கல்வி எங்கிருந்து கிடைக்கும் முதல்வரே.

மாணவர்களின் கல்வி மீது கொண்ட ஆர்வத்தால் நீங்கள் இந்த சந்திப்பை நிகழ்த்தவில்லை; விளாத்திக்குளம் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டாதால் மாநிலம் முழுவதும் மக்களிடையே ஏற்பட்டுள்ள கோபத்தை திசை திருப்புவதற்காகத் தான் இந்த விளம்பரப்படத்தை நீங்கள் வெளியிட்டுள்ளீர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இத்தகைய விளம்பரப்படங்கள் மூலம் மக்களை ஏமாற்ற முடியாது. இன்னும் சில வாரங்களில் நடக்கவிருக்கும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் உங்களால் மறக்க முடியாத தீர்ப்பை அளிப்பார்கள். அதன்பின் விளம்பரப் படங்களில் நடித்து தான் நீங்கள் பொழுதைக் கழிக்க வேண்டியிருக்கும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மகளுக்கு பாலியல் தொல்லை: கொடூர தந்தை அதிரடி கைது

பெரம்பூர், மார்ச்.15-

பெற்ற மகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த கொடூர தந்தையை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். சென்னை அயனாவரம் பகுதியை சேர்ந்தவர் 44 வயது பெண்ணுக்கு கணவர், 2 மகள்கள் உள்ளனர். கடந்த 6ம் தேதி மூத்த மகளை அழைத்துக்கொண்டு அந்த பெண் கடைக்கு சென்றுள்ளார். அப்போது இரண்டாவது மகளான



9வது படிக்கும் 16 வயது சிறுமியும் தந்தையும் வீட்டில் இருந்துள்ளனர். அப்போது திடீரென தந்தை மகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதை சற்றும் எதிர்பார்க்காத மகள் அதிர்ச்சி அடைந்து கூச்சல் போட்டுள்ளார்.

Rail Freight

இதுபற்றி தனது தாயிடம் தெரிவித்தையடுத்து உடனடியாக அயனாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தியபோது, ''சிறுமியின் தந்தை, 'தனக்கு மனநிலை சரியில்லை'' என்று கூறியுள்ளார். இதையடுத்து அவரை கீழ்பாக்கம் மனநல மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளித்தனர். அவர் குடிபோதைக்கு மாத்திரைகள் எடுத்து வருவதும் மனநலம் பாதிக்கப்பட்டவர் இல்லை என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து போக்கோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்திவிட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கிருஷ்ணகிரியில் திமுக சார்பு அணிகள் நிர்வாகிகள் சந்திப்பு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு




கிருஷ்ணகிரி, மார்ச் 15:

கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனை கூட்டம் சென்னை சாலையில் உள்ள தேவராஜ் மஹாலில் நடைபெற்றது. இந்த கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்.எல்.ஏ., மேற்கு மாவட்ட செயலாளரும் ஓசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரான அர. சக்கரபாணி முன்னிலை வகித்தார். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.கே. கிருபாகரன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார். நிகழ்ச்சியில் அமைச்சர் அர. சக்கரபாணி, தே. மதியழகன் எம்.எல்.ஏ., ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மேலும் திமுக சார்பு அணிகளின் பல நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




# பம்மல் 10வது வார்டு பகுதியில் சிறு கோபுர மின் விளக்கை திறந்து வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு

பம்மல் மார்ச் 15

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பம்மல் 1வது மண்டலம் 10வது வார்டு எம்ஜிஆர் சாலை மசூதி தெருவில், ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 4 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறு கோபுர மின்விளக்கு கல்வெட்டினை நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு திறந்து வைத்து மின்விளக்கு ஒளிர்வினை துவக்கி வைத்தார். உடன் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மண்டலக்குழு தலைவர் வே.கருணாநிதி, பம்மல் வடக்கு பகுதி திமுக செயலாளர் த.ஜெயக்குமார், 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் மதினாபேகம், 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரம்யா சத்யபிரபு, 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் சத்யாமதியழகன், மாநகராட்சி மண்டல பொறியாளர் சத்தியசீலன் ஆகியோர் உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# பம்மல் 11 வது வார்டு பகுதியில் 15 லட்சம் ரூபாய் செலவில் நூலகம் மற்றும் 4 லட்ச ரூபாய் செலவில் சிறு கோபுர மின் விளக்கை திறந்து வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு

பம்மல் மார்ச் 15

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 11 வது வார்டு பகுதியில் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாசுதேவன் தெருவில் புதிய நூலக கட்டிடம், மற்றும் 11.5 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம், 4 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிறுகோபுர மின் விளக்கு திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு நூலகம், அங்கன்வாடி, சிறு கோபுர மின் விளக்குகளை திறந்து வைத்தார். இதில் மேயர் வஸந்தகுமாரி, துனை மேயர் காமராஜ், பம்மல் மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, வடக்கு பகுதி செயலாளர் ஜெய்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ரம்யாசத்யபிரபு, சத்யா மதியழகன், மண்டல பொறியாளர் சத்யசீலன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# பெரியகுளம் அருகே தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மா மரங்களில் பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிளுக்கு மேலாண்மை பயிற்சி




பெரியகுளம் மார்ச். 15-

தேனி மாவட்டம் பெரியகுளம் கும்பக்கரை, சோத்துப்பாறை, காடுவெட்டி, கோயில் காடு, வரட்டாறு , வட்டக்கரடு, வாலாட்டி , முருகமலை, பூசணி மலை, சச்சுமடை ஆகிய பகுதிகளில் மா, பலா, எலுமிச்சை விவசாயம் அதிகம் செய்து வருகின்றனர். இங்கு விளையும் மா வகைகளில் கல்லாமை, செந்தூரம், காசா லட்டு, பங்குன பள்ளி, அப்போன்சா, மனோ ரஞ்சிதம் போன்ற மாங்கனிகள் சுவையாக இருப்பதால் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் வியபாரிகள் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் அண்டை மாநிலங்களான கேரளா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறனர். இதனால் இங்கு விளையும் மாங்கனிகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது.ஆனால் கடந்த சில ஆண்டுகளாக மா மரங்களில் நோய் தாக்கி மரங்கள் அதிகமாக பாதிக்கபட்டதால் விளைச்சல் குறைந்ததுடன் விலையும் குறைந்தது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்து கவலையில் ஆழ்த்தியதுடன் மா விவசாயம் நலிந்து வருவதால் மாற்று விவசாயத்தை நாடுகின்றனர், இதனால் மா மரங்களை வெட்டி அழித்து வருகின்றனர். இந்நிலையில் பெரியகுளம் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் மா விவசாயிகளுக்கு "பழ பயிர்களில் பூச்சி மேலாண்மை பயிற்சி " கும்பக்கரை அருகே கரடி பொட்டல் பகுதியில் உள்ள விவசாயிகள் சங்க தலைவர் மணி கார்த்திக் மாந்தோப்பில் பயிற்சி நடை பெற்றது. இந்த பயிற்சியில் தோட்டக்கலை அதிகாரிகள் விவசாயிகளிடம் பேசும்போது "மா விளச்சலை தத்துப் பூச்சி தான் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துகிறது, அதே போல் பூ பேன் , இலை பேன் போன்ற பூச்சிகளும் தாக்குவதால் மா இலை கறுப்பாக நிறம் மாறுகிறது. அதேபோல் முறையாக

மா மரங்களில் கவாத்து வெட்டினால் பாதிப்பு குறைய வாய்ப்பு உள்ளது. பூ மற்றும் பிஞ்சாக இருக்கும் போது மட்டுமே பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும். ஆனால் காய் திரண்டு பருமனான பின்பு பூச்சி கொல்லி மருந்து தெளிக்க கூடாது. தத்து பூச்சி, இலை பேன், பூ பேன் ஆகியவைகளை கட்டுப்படுத்த நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி "மெத்தில் யூஜினால் (பழ ஈ பொறி)"குப்பியை மாத்தில் தொங்க விட்டு மரங்களை காப்பாற்றலாம். அதன் பின்பு மா அறுவடை செய்ய 30 நாட்களுக்கு முன்பு பூச்சிகொல்லி மருந்துகளான மேங்கோசப் கார்பன்டாசின் ஆகிய மருந்துகளை பயன்படுத்தலாம். இதனால் ஆந்த்ரக்னோஸ் நோய் தாக்காது. அதிகமாக மருந்து தெளிக்கப்படுவதால் மரங்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்பட்டு விளைச்சல் மற்றும் சுவை குறைய வாய்ப்பு உள்ளது " என்று பேசினர். இந்நிகழ்வில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் முதல்வர் சரஸ்வதி, தோட்டக்கலை கல்லூரி பழவியல் துறை தலைவர் முத்துலட்சுமி, இணை பேராசிரியர்கள் விஜய சாமூண்டீஸ்வரி ( பயிர் நோயியல்) , சுகன்யா கண்ணா (பூச்சி யியல்) , பழவியல் உதவி ஆசிரியர் சங்கர் , பெரியகுளம் மா விவசாய சங்க தலைவர் மணி கார்த்திக், பெரியகுளம் நகர வளர்ச்சி சங்க செயலாளர் அன்புக்கரசன், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவர்கள், பணியாளர்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு தோட்டக்கலை கல்லூரி பணியாளர்கள் மூலம் செய்முறை விளக்க பயிற்சி அளித்தனர்.



■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 41.51 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 500 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 147.92 கோடி மதிப்பீட்டில் 709 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 10,709 பயனாளிகளுக்கு 326.93 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரகாஷ்,மதியழகன், ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார், ஒசூர் மாநகராட்சி மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தைய்யா, ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகமது ஷபீர் ஆலம்,மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 50வது வார்டு ரங்கநாதபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது நிவாரண நிதியிலிருந்து 39 லட்சம் மதிப்பீட்டில் ஆறு படுக்கை வசதிகள் கொண்ட டயாலிசிஸ் மையத்தை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழக பொருளாளர் நாடாளுமன்ற தலைவர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர் ராஜா, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் பாலச்சந்தர், மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் யாகூப், டி.ஆர்.கோபி, சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், வட்டச் செயலாளர் வினோத், மாநகர பகுதி நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் கழகத் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






# கிருஷ்ணகிரியில் திமுக சார்பு அணிகள் சந்திப்புதுணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச். 15-:

கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பு அணிகள் சந்திப்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரி ஸ்ரீ தேவராஜ் மஹாலில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும் திமுக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு கழக ஆக்கப்பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரான சக்கரபாணி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயலாளரும் ஓசூர் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், ஒசூர் மேயர் S. A. சத்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பு நிகழ்ச்சியில் திமுக சார்பு அணிகளின் செயல்பாடுகள், உறுப்பினர் சேர்க்கை இயக்கம், வரவிருக்கும் தேர்தல் பணிகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் கட்சி அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் என்று நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் திமுக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர்.




# திருவையாறில் அரசர் கல்லூரி சார்பில் மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது

தஞ்சாவூர் மார்ச். 15-

திருவையாறு அரசர் கல்லூரியில் மகளிர் தின விழா கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் தலைமையில் நடந்தது. நிகழ்ச்சியில் உதவி பேராசிரியர் ரஜினி தேவி வரவேற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகர் மற்றும் மேனாள் ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ரமேஷ், சமூகவியல் துறை துணைத்தலைவர் பொன்னிச்செல்வன், வணிகவரித்துறை தலைவர் ராஜமோகன் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

தஞ்சை மாவட்ட தொழில்துறை மைய மாவட்ட வள அலுவலர் ராஜ மகேஸ்வரி, திருவையாறு அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் சத்தியபாமா, திருவியாறு காவல் நிலைய ஆய்வாளர் மீனா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

உதவி பேராசிரியர் நற்சோனை தொகுத்து வழங்கினார். உதவி பேராசிரியர் அன்பரசி நன்றி கூறினார்.



# மேல திருப்பந்துருத்தி மில் துணை ராணுவ படையினர் கொடி அணிவிப்பு

தஞ்சாவூர் மார்ச். 15-
திருவையாறில் 2026ம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு துணை ராணுவ படைனரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது. போலீஸ் டிஎஸ்பி அருள்மொழிஅரசு தலைமையில் மேல திருப்பந்துருத்தி பூங்காவில் இருந்து துணை ராணுவ படையினர், ஆயுதப்படை யினர், சிறப்பு காவல் படை யினர் மற்றும் திருவையாறு நடுக்காவேரி போலீசாரின் கொடி அணி வகுப்பு ஊர்வலம் பேரூராட்சி சமுதாய கூடத்தில் நிறைவடைந்தது. இதில் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், அகிலன், முகமது இப்ராஹிம் மற்றும் மற்றும் துளை ராணுவ படையினர் கலந்து கொண்டனர்.





# தேனி மாவட்டத்தில் திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் ஆய்வு

தேனி மார்ச். 15-
திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr. V. சசிமோகன், தேனி மாவட்டத்திற்கு வருகை தந்து உத்தமபாளையம் மற்றும் போடி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அலுவலக பதிவேடுகள், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் காவல் நிர்வாக செயல்பாடுகள் குறித்து விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. மேலும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களிடம் சட்டம் மற்றும் ஒழுங்கை சிறப்பாக பேணுதல், குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல் ஆகியவை குறித்து தேவையான அறிவுரைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, வருகின்ற 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு காவல்துறை யினர் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் கலந்துரையாடி, தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கினார்.






■ முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழகம், பர்கூர் மத்திய ஒன்றியம், ஒப்பத்தவாடி பகுதியில் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை புரிந்த தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ஒப்பத்த வாடி பகுதியில் அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடிக்கம்பத்தில் திமுக கொடியை ஏற்றி வைத்தார். பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், மாநில மருத்துவர் அணி டாக்டர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி சி ஆர் தினேஷ் ராஜன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள்,5000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவில் முறைகேடாக விசா பெற குற்ற செயல்களில் ஈடுபட்டு மோசடி செய்த 10 இந்தியர்கள் கைது

வாஷிங்டன், மார்ச்.15-
அமெரிக்காவில் முறைகேடாக விசா பெற குற்ற செயல்களில் ஈடுபட்டு மோசடி செய்த 10 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர். ஜிதேந்திரகுமார் படேல், மஹேஷ்குமார் படேல், சஞ் சய்குமார் படேல் உள்பட 10 பேரை அமெரிக்கா போலீஸ் கைது செய்தது.

# சென்னையில் ஐஸ்வர்யா மருத்துவமனையின் அதிநவீன புற்றுநோய் மையம்:நடிகர் சத்யராஜ் திறந்து வைத்தார்





சென்னை மார்ச். 15-
சென்னை, 08 மார்ச் 2026: மாலை 4 : 00 மணிக்கு அதிநவீன புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கான சேவையை மேலும் மேம்படுத்தும் விதமாக, ஐஸ்வர்யா மருத்துவமனை தனது ஓ.எம்.ஆர்., தரமணி வளாகத்தில் ஐஸ்வர்யா புற்றுநோய் மையத்தை திறந்தது. இதை நடிகர் சத்யராஜ் திறந்து வைத்தார்.

இதன் மூலம், துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை, இம்யூனோதெரபி, சிக்கலான புற்றுநோய் அறுவை சிகிச்சைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் பெட்சிடி ஸ்கேன் உள்ளிட்ட மேம்பட்ட சேவைகளை இந்த மையம் அறிமுகப்படுத்துகிறது. இது புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே மிகத் துல்லியமாகக் கண்டறிய உதவும்.

நிகழ்ச்சியில், ஐஸ்வர்யா மருத்துவமனையின் தலைமைச் செயல் அதிகாரி டாக்டர்., எஸ். ராஜசுந்தரம், நிர்வாக இயக்குனர் டாக்டர்., அருண் முத்துவேல் மற்றும் மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சிறப்புப் புற்றுநோய் மருத்துவக் குழுவினர் உட்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

செயற்கை நுண்ணறிவுடன் கூடிய பெட்சிடி ஸ்கேன் மற்றும் துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை எந்திரங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் இந்த மையம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இவை புற்றுநோயைக் கண்டறிதல், அதன் நிலையை அறிதல் மற்றும் சிகிச்சையளித்தல் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், புற்றுநோய் செல்களை எளிதில் கண்டறிந்து அவற்றை எதிர்த்துப் போராட உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மேம்பட்ட சிகிச்சை முறையான 'இம்யூனோதெரபி' சிகிச்சையும் இங்கு வழங்கப்படுகிறது.

திறப்பு விழாவில் ஐஸ்வர்யா மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் எஸ். ராஜசுந்தரம் பேசுகையில், "இந்தியாவில் இன்று புற்றுநோய் ஒரு மிகப்பெரிய சுகாதார சவாலாகத் தொடர்கிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் தேசிய புற்றுநோய் பதிவேட்டுத் திட்டத்தின்படி, 2025ம் ஆண்டில் புதிய புற்றுநோய் பாதிப்புகள் சுமார் 15 லட்சத்து 70 ஆயிரமாக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதில் மார்பக, நுரையீரல் மற்றும் வாய் புற்றுநோய்களே அதிக அளவில் காணப்படுகின்றன. ஓஎம்ஆர் தரமணியில் ஐஸ்வர்யா புற்றுநோய் மையம் திறக்கப்பட்டுள்ளதன் மூலம், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நோயாளிகளுக்குத் தேவையான நேரத்தில் நோயைக் கண்டறிதல், மேம்பட்ட சிகிச்சைகள், சிக்கலான புற்றுநோய் அறுவை சிகிச்சைகள், துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சை, இம்யூனோதெரபி மற்றும் பல்துறை புற்றுநோய் சிகிச்சைகள் ஆகியவற்றை ஒரே இடத்தில் வழங்குவதற்கான தனது நோக்கத்தை இந்த மருத்துவமனை மேலும் வலுப்படுத்தியுள்ளது.




# சர்வதேச மகளிர் தினம் 2026ஆஷா நிவாஸ் சமூக சேவை நிறுவனம் சார்பில் சர்வதேச மகளிர் தினம்

சென்னை மார்ச். 15-
சர்வதேச மகளிர் தினம் 2026ஆஷா நிவாஸ் சமூக சேவை நிறுவனம் சார்பில் சர்வதேச மகளிர் தினம் நேற்று 14.03.2026 ராஜா அண்ணாமலை அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. ஆஷா நிவாஸ் செயலாளர் திவ்யா அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். செல்வி. லில்லி ஜோஸ்பின் கலைநிகழ்சிகளை துவக்கிவைத்தார். மேரி மேக்தலின் ஆஷா நிவாஸ் ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். ஆஷா நிவாஸ் இயக்குனர் அருட் தந்தை டாக்டர் குரியன் தாமஸ் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களை தெரி வித்துக்கொண்டார் மேலும் ஆஷா நிவாஸின் அனைத்து திட்டங்களையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்சில் சென்னை பெருநகர மேயர் மாண்புமிகு பிரியா ராஜன் மற்றும் சாந்தகுமாரி (சென்னை பெருநகர சுகாதாரத்துறை தலைவர்) ஆகியோர் கலந்து கொண்டு ஆஷா நிவாஸ் சுய உதவி குழுக்களை சிறப்புடன் வழிநடத்தி வருகிறது என பாராட்டுகளை தெரி வித்தார்கள் மற்றும் சிறப்பாக செயல்படும் 40 சுய உதவி குழுக்களுக்கு விருதுகளை வழங்கினார்கள். இவ்விழாவில் 1200 சுய உதவி குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# "அமெரிக்காவும் யூதர்களும் தக்க விலையை கொடுப்பார்கள்" ஈரான் அதிகாரி எச்சரிக்கை

தெஹ்ரான், மார்ச்.15-
"நியாயமற்ற முறையில் சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தத்திற்கும், ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கும், இழப்புக்கும் அமெரிக்காவும் யூதர்களும் தக்க விலை கொடுப்பார்கள்" என்று ஈரானின் 'காதம் அல்அன்பியா' மத்திய தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் இப்ராஹிம் ஜோல்ஃபாகரி எச்சரித்தார்.

சனிக்கிழமையன்று தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜோல்ஃபாகரி, "நாட்டின் வான்வெளியைப் பாதுகாக்கும் வீரர்களின் நடவடிக்கையின் பேரில், ஃபிருசாபாத் மற்றும் பந்தர் அப்பாஸ் ஆகிய இடங்களில் இரண்டு எம்கியூ9 ரக ட்ரோன்கள் மற்றும் தப்ரிஸ் வான்வெளியில் மற்றொரு விமானம் என மொத்தம் மூன்று விமானங்கள் 'செபா' (Sepah) படையின் வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. இதுவரை அழிக்கப்பட்ட பல்வேறு வகையான போர், உளவு மற்றும் ட்ரோன்கள் எண்ணிக்கை 112ஐ எட்டியுள்ளது.

சர்வதேச குட்ஸ் தினப் பேரணியில் மக்களின் வியக்கத்தக்க பங்கேற்பைத் தொடர்ந்து, ஈரான் ராணுவத்தின் துணிச்சலான வீரர்கள், செபா படையின் விமான மற்றும் கடற்படைப் பிரிவினர் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இணைந்து 'ஆபரேஷன் ட்ரூ பிராமிஸ் 4' இன் 45வது அலை தாக்குதலை நடத்தினர்.

ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்ட யூதர்களின் வடக்குக் கட்டளை மையக் கட்டமைப்புகளையும், அமெரிக்கப் படைகளின் ராணுவ தளங்களையும் அழிப்பதே எங்களின் முதன்மையான உத்திசார் இலக்குகள் ஆகும். இப்பிராந்தியத்தை விட்டு வெளியேறுமாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கையைத் தொடர்ந்து, 'அல் தஃப்ரா' மற்றும் 'எர்பில்' ஆகிய தளங்கள் உட்பட அமெரிக்கப் படைகளின் மையங்கள் அடையாளம் காணப்பட்டுத் தாக்கப்பட்டன.

மேலும், "ஆபரேஷன் ட்ரூ ப்ராமிஸ் 4 இன் 46 வது அலை தாக்குதலும்" மேற்கொள்ளப்பட்டது. இது அமெரிக்க மற்றும் யூத அரசின் தளபதிகள் மற்றும் படைகளை குறிவைத்து தாக்கியது. நியாயமற்ற முறையில் சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தத்திற்கும், ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்கான, இழப்பீட்டிற்கும் அமெரிக்காவும் யூதர்களும் தக்க விலை கொடுப்பார்கள்" என்றார்.

# ஆயக்குடியில் நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால் விவசாயிகள் கடும் வேதனை

திண்டுக்கல் மார்ச் 15
திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பகுதி தமிழகத்தின் இரண்டாவது நெல் சாகுபடி செய்யும் பகுதியாக காணப்பட்டு வருகின்றன. தொடர்ந்து இப்பகுதியில் அனைத்து வகையான நெல் வகைகள் அதிகமாக பயிரிடப்பட்டு அறுவடை செய்து வருகின்றனர். மேலும் தமிழகத்தில் தஞ்சாவூர் பகுதிக்கு அடுத்தபடியாக ஆயக்குடி பகுதியில் நெல் சாகுபடி அதிகமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தமிழக அரசு மற்றும் வேளாண்மை துறை சார்பாக இப்பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படாததால் விவசாயிகள் கடும் வேதனை அடைந்து வருகின்றனர். தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்ட நெல்லிற்கு உரிய விலை இல்லாததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். நெல் உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப்பொருட்கள் விலை அதிகப்படியாக காணப்பட்டு வருவதால் விவசாயிகள் கடுமையான சூழலுக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். தொடர்ந்து அதிகப்படியான செலவுகள் செய்து உற்பத்தி செய்யப்பட்ட நெல்லிக்கு உரிய விலை இல்லாததால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். மேலும் ஆயக்குடி பகுதியில் விவசாயத்துறையின் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்னர் நெல் கொள்முதல் நிலைய கட்டிடம் கட்டப்பட்டு இதுவரை திறக்கப்படவில்லை. தொடர்ந்து அதிகமாக நெல் விளையும் இப்பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால் தனிநபர்களுக்கு குறைந்த விலையில் நெல் விற்பனை செய்யும் அவல நிலை ஏற்பட்டு வருகின்றது.



மேலும் நெல் நடவு செய்து போதிய வருமானம் இல்லாததால் விவசாய நிலங்கள் வீட்டுமனை பிரிவுகளாக மாற்றப்பட்டு வருகின்றன. உடனடியாக பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில் குமார் இந்நிகழ்வில் தலையிட்டு ஆயக்குடி பகுதியில் விவசாயிகளின் நலன் காக்கும் விதமாக நெல் கொள்முதல் நிலைய கட்டிடத்தை மறு சீரமைப்பு செய்து நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

மேலும் ஆயக்குடிக்கு அருகில் உள்ள பாலசமுத்திரம் நெய்காரப்பட்டி போன்ற பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதிகப்படியாக நெல் விளையும் ஆயக்குடி பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கேள்விக்கணைகளை தொடுத்து வருகின்றனர்..



## பெரியகுளத்தில் தவெக சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில்மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.பிரகாஷ் பங்கேற்பு

பெரியகுளம் மார்ச். 15-

தேனி மாவட்டம் பெரியகுளம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள தனியார் மண்படத்தில் பெரியகுளம் நகர தமிழக வெற்றிக் கழகம் சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நகர செயலாளர் தினேஷ் தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் நகர இணைச் செயலாளர் முகமது வாஜித் முன்னிலை வகித்தார்.தேனி வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ் பிரகாஷ் தலைமையேற்று இப்தார் நோன்பை திறந்து வைத்தார். இதில் நகர பொருளாளர் இம்ரான் , நகர துணை செயலாளர் மதன, மாவட்ட தொண்டர் அணி இணைச்செயலாளர் பூக்கடை முனீஸ், நகர செயற்குழு உறுப்பினர் ராஜாமுகமது, நகர தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் ராஜா, மகளிர் அணி செயலாளர் ஆதிபராசக்தி உள்பட மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக தேனி வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். பிரகாஷ்க்கு பெரியகுளம் நகர தவெக சார்பில் பொன்னாடை போர்த்தி மாலை மரியாதை செய்து வரவேற்றனர். இந்த நிகழ்ச்சியை நகர இணைச் செயலாளர் முகமது வாஜித் ஏற்பாடு செய்திருந்தார்.




## திருவையாறு அரசு மருத்துவமனைக்கு இசிஜி உபகரணம் வழங்கும் விழா

தஞ்சாவூர் மார்ச்.15-

திருவையாறு பாரதி பவுண்டேஷன், பாரதி இயக்கம்நேசக்கரம் ,நடுக்கடை ஹாஜி முகம்மதுகனி நினைவு அறக்கட்டளைசார்பில் அரசு மருத்துவமனைக்கு இசிஜி உபகரணம் வழங்கும் விழா நடைபெற்றது.

ரோட்டரி சமுதாய குழும திட்ட தலைவர் குருசரவணன் வரவேற்றார்,

தலைவர் சாமிநாதன் தலைமை வகித்தார். ரோட்டரி முன்னாள் துணை ஆளுநர் சாமி சம்பத்குமார் இசிஜி உபகரணம் மற்றும் 30,000 மாத்திரை கவர்களை அரசு மருத்துவமனை தலைமை டாக்டர் லோகநாதனிடம் வழங்கினார் .இதில் ஐயாறப்பர் நாட்டியாஞ் சலி பொதுச்செயலாளர் குணசேகரன் ,பாரதி பவுண்டேஷன் அறங்காவலர் பிரேமசாயி, செல்லம்மாள் பாரதி மகளிர் மன்ற தலைவி சரிதா, பாரதி இயக்க தலைவர் சந்திரசேகரன், தேசக்கரம் தலைவர் குமணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சமுதாய குழும பொருளாளர் ஞான ராஜ ராஜன் நன்றி கூறினார்.

## மாநிலங்களவை தேர்தலில் பாஜகவின் குதிரை பேரத்தால் அரியானா காங். எம்எல்ஏக்கள் ரிசார்ட்டில் தங்கவைப்பு



சிம்லா, மார்ச்.15-

அரியானா மாநிலங்களவை தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் எம்எல்ஏக்கள் பாதுகாப்பிற்காக இமாச்சல பிரதேச ரிசார்ட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த 2022ம் ஆண்டில் நடந்த மாநிலங்களவை தேர்தலின் போது, போதுமான பலம் இருந்தும் காங்கிரஸ் கட்சி தனது வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய முடியாமல் போனது. அப்போது நடந்த வாக்குப்பதிவில் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் கட்சிக்குள்ளேயே நடந்த சில மாற்றங்களால் வெற்றி வாய்ப்பு கைநழுவிப் போனது கசப்பான அனுபவமாக அமைந்தது. தொடர்ந்து, நாளை மறுநாள் நடைபெற உள்ள மாநிலங்களவை தேர்தலை முன்னிட்டு, அரியானாவின் 30 முதல் 32 காங்கிரஸ் எம்எல்ஏக்கள் இமாச்சல பிரதேசத்தில் உள்ள குப்ரி மலைப்பிரதேச ரிசார்ட்டிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சண்டிகரில் உள்ள பூபிந்தர் சிங் ஹூடா இல்லத்தில் நேற்று நடந்த காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி கூட்டத்திற்குப் பிறகு, இரண்டு சொகுசு பேருந்துகளில் எம்எல்ஏக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். குப்ரியில் உள்ள அட்வென்ச்சர் ரிசார்ட்டில் 32 அறைகள் முன்பதிவு செய்யப்பட்டு அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர். தற்போது அரியானாவில் உள்ள இரண்டு மாநிலங்களவை இடங்களுக்கு கடும் போட்டி நிலவுகிறது. பாஜக சார்பில் சஞ்சய் பாட்டியாவும், காங்கிரஸ் சார்பில் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த கரம்பீர் சிங் பவுத்தும் போட்டியிடுகின்றனர். இந்நிலையில் சதீஷ் நந்தல் சுயேச்சையாக (பாஜக ஆதரவாளர்) களமிறங்கியுள்ளதால் போட்டி மும்முனைப் போட்டியாக மாறியுள்ளது. 90 உறுப்பினர்களைக் கொண்ட அரியானா சட்டசபையில், ஒரு வேட்பாளர் வெற்றி பெற 31 வாக்குகள் தேவை.

காங்கிரசிடம் தற்போது 37 எம்எல்ஏக்கள் இருந்தபோதிலும், மற்ற கட்சிகள் குதிரை பேரத்தில் ஈடுபடுவதைத் தடுக்க இந்த 'ரிசார்ட் அரசியல்' நீண்டகால திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த பயணத்தில் பூபிந்தர் சிங் ஹூடா, வினேஷ் போகட் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. இதுகுறித்து பூபிந்தர் சிங் ஹூடா கூறுகையில், 'எம்எல்ஏக்கள் அனைவரும் தாமாக முன்வந்துதான் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளனர். தேர்தல் நடைபெறும் நாளன்று அவர்கள் அனைவரும் சண்டிகர் திரும்பி தங்களது வாக்குகளைப் பதிவு செய்வார்கள்' என்று தெரிவித்தார்.

## 'அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால்..?' சீமான் ரியாக்ஷன்



திருச்சி, மார்ச்.15-

"என் வாக்காளர்கள் யார் எனத் தெரிந்துகொண்டே அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால் எங்களுக்கு பாதிப்பு வருமா என கேட்கிறீர்கள். பாதிப்புக்கு பயந்து நிற்பவன் ஒரு போர்வீரனாக இருக்க முடியுமா?" என்றார் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

திருச்சி விமான நிலையத்தில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "தமிழகத்தில் கடந்த 15 நாட்களுக்குள் பல்வேறு கொலைகள், பாலியல் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளன. 6 வயது குழந்தை யிலிருந்து 60 வயது முதியவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற தொடர் குற்றச் செயல்கள் அதிகரிப்பு சமூகத்தின் ஒழுக்க சீர்கேட்டுக்கு காரணமாகிறது. குற்றங்களில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் மதுபோதையில் உள்ளது கவலைக்குரியது. இதைத் தடுப்பதற்கு அரசுக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கும் பொறுப்புள்ளது.

சாதி அரசியலாக மாறி அதிகாரத்துக்கு வந்தால் சமத்துவம் அழியும். மதம் அரசியலாக மாறினால் மனிதம் அழியும். பணம் அரசியலாக மாறினால் பண்பாடு மற்றும் ஒழுக்கம் அழியும். நல்ல ஒழுக்கம் மற்றும் அறநெறி கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்.

எதிர்காலத்தில் பத்திரமாக நம் குழந்தைகளை இந்த பூமியில் விட முடியுமா என்ற ஐயம் எழுகிறது. ஆட்சியாளர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் ஆட்சியாளர்களை தேர்வு செய்த மக்களும் பொறுப்பேற்க வேண்டும்.

தொடர்ந்து 60 ஆண்டுகளாக தவறு செய்யும் ஆட்சியாளர்களையே தேர்வு செய்து, இதே அதிகாரங்களே நிறுவப்பட்டு வந்தால் என்ன மாற்றம் நிகழும்?

தவெக தலைவர் விஜய்க்கு சிபிஐ சம்மன் குறித்து கருத்து கூற விரும்பவில்லை.

அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைவரும் கட்சி தொடங்குகிறார்கள். அந்த வகையில் புதிய கட்சி தொடங்கி உள்ள சசிகலாவுக்கு வாழ்த்துகள்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தை ஏற்றுக் கொண்ட நாட்டில் இருந்து கொண்டு தனியார்மயத்துக்கு எதிராக திமுக போராடுவதாக கூறுவது வேடிக்கை. தனியார்மயத்துக்கு கையெழுத்து போட்டதே திமுக தான். தூய்மைப் பணியாளர், கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகள் ஏற்கெனவே தனியார்மயமாகிவிட்டன. சாரயக்கடை தான் அரசிடம் உள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் போடும் குண்டை விட திமுக தனியார்மயத்துக்கு எதிராக போராடும் என்பது பெரும் குண்டாக இருக்கிறது.

பெரிய பொருளாதார பின்னணி இல்லாத எளிய பிள்ளைகளான நாங்கள் முன்கூட்டியே ஓடத் தொடங்க வேண்டும். அவர்கள் செய்தித்தாள்களில் முன்பக்கம் விளம்பரம் கொடுப்பர். எங்களுக்கு அதற்கு வசதியில்லை. எனவே முன்கூட்டியே வாக்காளர்களை சந்தித்து அரசியல் நிலைப்பாடுகளை விளக்கி வருகிறோம்.

தமிழர் நலனுக்காக நடத்தப்படும் போராட்டங்கள் மக்களிடம் சென்று சேர வேண்டும் என்றும், அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது. உலக நாடுகள் தலையிட்டு ஈரான் ஞ இஸ்ரேல் போரை நிறுத்த வேண்டும்.

என் வாக்காளர்கள் யார் எனத் தெரிந்து கொண்டே அதிமுக கூட்டணிக்கு தவெக சென்றால் எங்களுக்கு பாதிப்பு வருமா என கேட்கிறீர்கள். பாதிப்புக்கு பயந்து நிற்பவன் ஒரு போர்வீரனாக இருக்க முடியுமா?

குடும்பத் தலைவிக்கு ரூ.2,000 தருவேன் என்கின்றனர். நான் கூட மாதம் மாதம் ரூ.50,000 தரலாம் என நினைக்கிறேன். எதையாவது சொல்லிவிட்டு போக வேண்டியதுதான்" என்றார் சீமான்.

## ஆர் எஸ் மங்கலம் தாலுகா அலுவலகத்தில் தாசில்தாராக வரதன் பொறுப்பேற்பு

ஆர் எஸ் மங்கலம். மார்ச். 15-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலத்தில் தாசில்தாராக பணியாற்றிய ராமமூர்த்தி பணி மாறுதலில் பரமக்குடி சென்றார் இதையடுத்து பரமக்குடியில் பணியாற்றி வந்த தாசில்தார் வரதன் ஆர்.எஸ். மங்கலம் தாசில்தாராக பொறுப்பேற்று கொண்டார்



தாசில்தார் வரதனுக்கு சமூக ஆர்வலர்கள் அலுவலர்கள் மற்றும் வாழ்த்து தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நவீன காவல் கட்டுப்பாட்டு அறையை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் சரவண சுந்தர் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணை காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## ஈரான் உச்ச தலைவர் பற்றி தகவல் கொடுத்தால் 10 மில்லியன் டாலர் வெகுமதி அமெரிக்கா அறிவிப்பு

தெஹ்ரான், மார்ச்.15-

ஈரானின் புதிய உச்ச தலைவர் மோஜ்தபா காமேனி மற்றும் பல ஈரான் தலைவர்கள் மற்றும் ராணுவ அதிகாரிகள் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை 10 மில்லியன் டாலர் வரை வெகுமதியை அறிவித்துள்ளது.



பிப்ரவரி 28 அன்று போரின் போது கொல்லப்பட்ட முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியின் மகன் மோஜ்தபா காமேனி உட்பட பல முக்கிய தலைவர்களை 'ஈரானிய பயங்கரவாதத் தலைவர்கள்' என்று குறிப்பிட்டு அமெரிக்க பாதுகாப்புத் துறை வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இந்த நபர்கள் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் (மிஸிநிசி) பல்வேறு படைப்பிரிவுகளை கட்டளையிட்டு வழிநடத்துகிறார்கள். இது உலகம் முழுவதும் பயங்கரவாதத்தைத் திட்டமிடுகிறது, ஒழுங்கமைக்கிறது மற்றும் செயல்படுத்துகிறது.

இவர்களை பற்றிய தகுதியான தகவல்கள் அளித்தால் 10 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை வெகுமதி அளிக்கப்படும். இது நீதிக்கான வெகுமதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிகப்பெரிய பரிசுகளில் ஒன்றாகும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா வெளியிட்டுள்ள தலைவர்கள் பட்டியலில் மோஜ்தபா காமேனி உட்பட புலனாய்வு அமைச்சர் எஸ்மாயில் காதிப், துணைத் தலைமைத் தளபதி அலி அஸ்கர் ஹெஜாசி, மேஜர் ஜெனரல் யஹ்யா ரஹீம் சஃபாவி, உள்துறை அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் எஸ்கந்தர் மோமெனி மற்றும் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் அலி லாரிஜானி உள்ளிட்ட பல ஈரான் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.


அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே அதிகரித்த பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்க பாதுகாப்புத்துறை இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது

## எல்பிஜி உடன் பாதுகாப்பாக ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த 2 இந்திய சரக்குக் கப்பல்கள்

புதுடெல்லி, மார்ச்.15-

இந்திய கொடி ஏந்திய இரண்டு சரக்கு கப்பல்கள் வளைகுடா நாட்டில் இருந்து எல்பிஜி உடன் பாதுகாப்பாக ஹார்முஸ் ஜலசந்தியை கடந்துள்ளதாக இந்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஷிவாலிக் மற்றும் நந்தா தேவி என அறியப்படும் இந்த சரக்கு கப்பல்கள் தற்போது குஜராத் மாநிலத்தை நோக்கி வந்து கொண்டுள்ளன. அந்த மாநிலத்தின் முந்த்ரா மற்றும் கண்ட்லா துறைமுகங்களுக்கு இந்த கப்பல்கள் வந்து கொண்டுள்ளதாக அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த இரண்டு சரக்கு கப்பல்களிலும் சுமார் 92700 டன் எல்பிஜி



உள்ளதாக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை படைகள் இணைந்து ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதலை தொடங்கின. அதையடுத்து ஈரானும் அமெரிக்காவுக்கு பதிலடி தரும் வகையில் வளைகுடா நாடுகளின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்கு ஆசியாவில் போர் மூண்டுள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியா உட்பட பல்வேறு நாடுகளுக்கு கொண்டு வரும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து முடங்கியது. இந்த ஜலசந்தியில் ஈரான் முடக்கவில்லை என தெரிவித்தது. இருப்பினும் தாக்குதல் சார்ந்த பதற்றம் காரணமாக போக்குவரத்து முடங்கியது.

இந்நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியின் மேற்கு பகுதியில் முடங்கியிருந்த 30+ சரக்கு கப்பலிகளில் தற்போது எல்பிஜி உடன் குஜராத் வந்து கொண்டிருக்கும் இரு கப்பல்களும் அடங்கும்.

இந்தியாவின் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி தேவையில் 80 சதவீதத்துக்கும் மேலாக இறக்குமதியைச் சார்ந்தே உள்ளது. இந்த ஹார்முஸ் ஜலசந்தி வழித்தடத்தில் பாதிப்பு ஏற்பட்டால் இந்தியப் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் என துறை சார்ந்த வல்லுநர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன் பின்னணியில் தான், இந்தியக் கப்பல்களுக்கு மட்டும் ஈரான் தற்போது விலக்கு அளித்துள்ளதாக தகவல். இது இந்தியாவில் எல்பிஜி மற்றும் கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டை சீராக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

முன்னதாக, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சியுடன் தொலைபேசி வாயிலாக தீவிர ஆலோசனை நடத்தினார். அப்போது இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையின் அத்தியாவசியத்தை ஜெய்சங்கர் எடுத்துரைத்தார். இரு நாடுகளுக்கும் உள்ள நீண்ட கால உறவு மேம்பட இந்திய கப்பல்களுக்கு வழிவிட வேண்டும் என்று அப்பாஸ் அரக்ச்சியை ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161